கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண். 76/2022

வா.சா.– 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பழனிச்சாமி | தொழில் | |
| த/பெயர் | ராம நாயக்கர் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 09.04.2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். ஆவணங்கள் தாக்கல் இல்லை

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

என்னை சாட்சியம் சொல்வதற்கு வாதியின் கணவர் பழனிச்சாமிதான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வாதியின் கணவர் பழனிச்சாமிதான் சொன்னார் என்றால் இல்லை, அவரும் சொன்னார், நானும் சொன்னேன். நானும் வாதியின் கணவரும் காதிகிராப்டில் ஒன்றாக வேலை செய்தோம். எனக்கு சொந்த ஊர் நிலக்கோட்டை தாலுகா ஜங்கால்பட்டி ஆகும். நான் திண்டுக்கல்லில் கடந்த 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வாதி, பிரதிவாதிகளின் குடும்ப விவரங்களை முழுவதுமாக எனக்கு தெரியாது என்றால் இல்லை, எனக்கு தெரியும். வாதியின் பெயர் பழனிச்சாமி ஆகும். பிரதிவாதிகளாக இரண்டு நபர்கள் உள்ளார்கள். 1 ம் பிரதிவாதியின் பெயர் பழனிச்சாமி ஆகும். 1 ம்பிரதிவாதியின் தகப்பனாரை நாளது தேதி நான் பார்த்ததில்லை. நான் எப்போதுமே பார்த்ததில்லை. 1 ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு எத்தனை மக்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரிடம் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, சுமார் 6 1/2 ஏக்கர் இருக்கும். 6 1/2 ஏக்கரின் எத்தனை சர்வே எண்கள், எந்தெந்த சர்வே எண்களில் என்ன விஸ்தீரணம் போன்ற விவரங்கள் தெரியாது. 6 1/2 ஏக்கரின் நான்கு மால் தெரியாது. 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் மேற்படி சொத்துக்களை 1 ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் இளவர்களாக இருக்கும்

போது 1ம் பிரதிவாதியின் தகப்பனார் தான் பட்ட கடன்களை தீர்ப்பதற்காக பி.வா.சா.ஆ.1ன் படி விற்று விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்று விட்டார் என்றாலும் தற்போது உள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சொத்துக்களை 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் ராசப்பன் அவர்கள் சொந்த உழைப்பில் வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் ராசப்பனும் சொந்த உழைப்பில் வாங்கிய சொத்துக்களை அவர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு 3 மக்கள் உள்ளார்கள். 1.புஷ்பம், 2. சாத்தம்மாள், 3. சுப்பிரமணி ஆகும். 1ம் பிரதிவாதி ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வாதி, பிரதிவாதிகளின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் என்னுடன் வாதியின் கணவர் ஒன்றாக காதிகிராப்டில் என்னுடன் வேலை செய்ததால் அவர் கேட்டுக் கொண்டதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.1. ஏற்கனவே அளித்த சாட்சியத்திற்கு விரோதமாக தற்போது சாட்சியம் அளிப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.09 21:19:35 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.